டாக்டர் என். ராஜ்மோகன், உளவியல் நிபுணர்

# பொறுப்பற்ற சமூகம்... வன்முறை வளர்க்கும்!



மும்பை தாக்குதலைத் தொடர்ந்து, ஒட்டுமொத்த குற்றச்சாட்டுப் பார்வையும் பாகிஸ்தான் மீதும், நம்மூர் அரசியல்வாதிகளின் மீதுமே பதிந்திருக்கும் நிலையில்... உளவியல் நிபுணரான ராஜ்மோகன் ''நாமெல்லாரும்கூடத்தான் குற்றவாளிகள்!'' என்கிறார். சிந்திக்க வைக்கும் அவர் பார்வை இங்கே -

நவம்பர் 26, 27, 28... இந்திய தேசம் முழுவதுமே டி.வி. முன் அமர்ந்து நிலைகுத்திய பார்வையோடு சினிமாவை மிஞ்சும் மும்பை பயங்கரவாதத் தாக்குதலைப் பார்த்துக் கொண்டிருந்தது.

இந்தக் கோர நிகழ்ச்சியைத் தொடர்ந்து, சில அரசியல்வாதிகளின் உணர்வு குன்றிய பேச்சுகளும் நடவடிக்கைகளும் பலரின் உணர்வுகளைத் தட்டி எழுப்பின.

பயங்கரவாதிகளின் தாக்குதல் சம்பவம் குறித்து பத்திரிகைகள், தொலைக் காட்சிகள் மற்றும் ஊடகங்கள் மூலமாகக் கருத்துப் பரிமாற்றங்கள், அறிவுபூர்வமாகவும், சில

சமயங்களில் ஒருதலைப் பட்சமாகவும் நடந்துகொண்டு இருக்கின்றன.

சமூக உளவியல் மீது அக்கறை கொண்டுள்ள என்னை யும் இந்தச் சம்பவங்கள் பாதித்திருக்கின்றன. இதில்

தவிர்க்கப்பட வேண்டியவை ஏன் தவிர்க்கப்படவில்லை? மாண்டவர்களின் குடும்பங்களுக்கு யார் பதில் சொல்வது?

அப்பாவி மக்களைக் கொல்வதன் மூலம் அரசாங்கம் மற்றும் பிற நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதே இந்தப் பயங்கரவாதிகளின் நோக்கம்.



மும்பையிலும் பிற இடங்களிலும் நடந்த பயங்கர வாதச் செயல்களுக்கு, இது மட்டுமே காரணம் என வரையறுத்துச் சொல்லிவிட முடியாது. பல செயல்களின், தொடர்ச்சிதான் இது. இப்படி நடக்க அரசியல்வாதிகள் மட்டுமே காரணம் என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. மற்றவர்களுக்கும் இதில் பங்குண்டு. திட்டங்கள் தீட்டுவதாலோ, படைகளைக் குவிப்பதாலோ பயங்கரவாதத்தை முழுமையாக வீழ்த்தி விட முடியாது. ஏனெனில், சட்டங்களுக்கும் பாதுகாப்பு வசதிகளுக்கும் துப்பாக்கிகளுக்கும் பின்னால் இருப்பது மனிதர்கள்தான்.

பயங்கரவாதத்துக்கு நான்கு தரப்பினர்தான் முக்கியக் காரணம். முதல் தரப்பு அரசியல்வாதி.



மன்னர் ஆட்சி பற்றிப் படித்திருக்கிறேன். அனுப வித்ததில்லை. அந்தக் குறை இப்போது இல்லை. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் 'மன்னராட்சி' தான்

நடந்துகொண்டு இருக்கிறது. ஆனாலும், இந்த 'மக்கள் ஆட்சி'யில் பலருக்கு நம்பிக்கை இருக்கிறது. அரசியல் தலைவர்கள் தங்கள் மனசாட்சியைத் தட்டி எழுப்பி, ஓர் உண்மையான உரையாடலை நிகழ்த்தவேண்டும். இந்தத் தலைமுறைக்கும் அடுத்த தலைமுறைக்கும் என்ன தலைமைப் பண்புகளை விட்டுச் செல்கிறோம்; என்ன மதிப்பீடுகளைக் கற்பிக்கிறோம் என்று யோசிக்க வேண்டும்.

தலைவர்கள் ஒருவரை ஒருவர் தாக்குவது, பொறுப்பற்ற செய்திகளை வெளியிடுவது, அரசியலில் அந்தர்பல்டி அடிப்பது... போன்ற காரணங் களால் அரசியல் தலைவர்கள் மேல் நம்பிக்கை போய் விட்டது!

அரசியல் தலைவர்களை அடுத்து இரண்டாவது காரணம், அரசாங்க அதிகாரிகள். அதிகாரிகளே பல முன்னேற்றங்களுக்கு எப்படித் தடையாக இருந்தார்கள் ண்பதைப் பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. போலீஸ் அதிகாரிகள் மக்களைப் பாதுகாப்பதற்கு பதிலாக அரசியல்வாதிகளுக்கு (அவர்களில் சிலர் ஜெயிலில் இருக்க வேண்டியவர்கள்) பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மும்பையில் பயங்கரவாதிகளால் சுடப்பட்டு மாண்டுபோன ஐ.பி.எஸ். அதிகாரி ஹேமந்த் கர்க்கரே எந்த அளவுக்குத் தனக்கு அரசியல்வாதிகளால் இடை யூறு வந்தது என்று பகிர்ந்து கொண்டிருக்கிறார். எத்தனையோ திறமையான அதிகாரிகளின் உழைப்பை நாம் வீணாக்கிவிட்டோம். சட்டத்தை எத்தனைஅதிகாரிகள் மதிக்கிறார்கள்? ஒவ்வோர் உயிரிழப்புக்குப் பின்னாலும்இவர்களுக்குப் பங்குண்டு என்பதை மும்பை சம்பவம் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது. தங்கள் பொறுப்பை இப்போதாவது உணர்வார்களா?

மூன்றாவது மீடியா. பத்திரிகைகளுக்கும் தொலைக்காட்சி சேனல்களுக்கும் நிகழ்வு களைப் படம் பிடித்துக் காட்டுவதிலும், செய்திகளைத் தருவதிலும் பெரும் பங்கு இருக்கிறது. குறிப்பாக தொலைக்காட்சிகள் 'லைவ்' ஆக நிகழ்வுகளைக் காட்டுவதால், அவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கிடைக் கிறது. ஆங்கில சேனல்கள் நிகழ்வுகளைக் காட்டியதோடு, அனைவரின் உணர்வு களையும் ஊதி ஊதி எரிய வைத்தன. 'மன்மோகன் சிங்கும் அத்வானியும் ஒன்றாக ஏன் செல்லவில்லை, இதில் கூட ஒற்றுமை கிடையாதா?' என்று கேட்ட டி.வி. சேனல்கள், தாங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மக்களுக்கு ஒருமித்த செய்திகளைக் கொடுக்கவில்லை. 'எக்ஸ்க்ளூசிவ் செய்தி' என்று விளம்பரம் வேறு. இந்தப்

போட்டியில் டி.வி. சேனல் களின் கடுமையான உழைப்பும் தெரிந்தது; அவர்களுக்குள்ள போட்டியும் தெரிந்தது. உயிரைப் பணயம் வைத்துப் போராடிய வீரர்களின் பாதுகாப்பு வியூகங்களைக்கூடக் காட்டி தீவிரவாதிகளுக்கு ஒத்தாசையாக இருந்தது கொடுமை!

பயங்கரவாதத்துக்குக் கடைசியான, மிக முக்கியமான காரணம்... மக்கள்! இவர்கள் அங்கீகரிக்காமல் மற்ற மூன்று காரணிகளும் திறமையாகச் செயல்பட முடியாது. ஆனால், மிகவும் பரிதாபமானவர்களும் இவர்கள் தான். இதில் படித்தவர், பாமரர் என்கிற வித்தியாசம் இல்லை. படிக்காதவன், விவரம் இல்லாததால் தவறு செய்கிறான். படித்தவன், தனக்கு பாதிப்பு இல்லை என்றால் சரி என்று ஒதுங்கி விடுகிறான். சட்டம்-ஒழுங்கு சீர்குலைய மூலகாரணமே இவர்கள்தான். தனியாக யாரைக் கேட்டாலும் தனிமனித ஒழுக்கத்தைப் பறைசாற்றும் இவர்கள், குழு ஒழுக்கத்தைத் தொலைத்துவிட்டவர்கள்; சுயநலத்தில் ஊறிவிட்டவர்கள். தன்னுடைய காரியம் ஆவதற்கு பிறர் மேல் ஏறி நடக்கத் தயாராக இருப்பவர்கள். இன்றைக்கு தினம் தினம் நடக்கும் விபத்துகளில் சாலையில் அடிபட்டு யார் விழுந்தாலும் பிழைப்பது அசாத்தியம்தான். யாரும் உதவி செய்ய முன்வர மாட்டார்கள்! பொறுமையையும் பொதுவாழ்வில் அக்கறை யையும் தொலைத்துவிட்டு ஆற்று நீரைச் சேறாக்கிவிட்டோம். இப்போது சேற்றில் எப்படி நீச்சல் அடிப்பது என்பது பற்றித்தான் இவர்களுடைய கவலை!

இப்படி ஒழுக்கமற்ற, நம்முடைய உயிர் களுக்கு மதிப்பளிக்காத, ஊழலை நியாயப் படுத்துகிற, பொறுப்பற்ற ஒரு சமூகம்தான் பயங்கரவாதிகளுக்கு விளைநிலம்.

இதிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். நல்ல கலாசாரத்தை, ஒழுக்கத்தை ஏற்படுத்தாத எந்த சமூகமும் மகிழ்ச்சியாக வாழ முடியாது. விழித்துக் கொள்வோம். எல்லோருடைய பொறுப்பையும் புரிய வைப்போம். நாமும் பொறுப்புடன் நடந்து கொள்வோம். இல்லாவிடில், பயங்கரவாதிகள் நிகழ்த்தும் கொடுமையைவிட நமக்கு நாமே செய்துகொள்ளும் கொடுமை பெரிதாகி விடும்!